## தலைப்பு 240 – தேசிய பாதீட்டு திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 இன் பாதீட்டு முன்மொழிவின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்யும் போது வரிகளில் இருந்து விடுவிக்கப்படடிருந்த போதிலும் வழங்குனர் கம்பனி அது வரையிலும் உற்பத்தி வரி செலுத்தி இறக்குமதி செய்த 2000 மோட்டார் சைக்கிள்களை பெற்று பகிர்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த 2000 மோட்டார் சைக்கிள்களுக்குரிய ரூபா | திருத்தப்பட்ட முரண்களுக்கான காரணம் தெளிவாக நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள துடன், மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்படாத முன்னுரிமை செலவின விடயங்களை செய்வதற்காக மதிப்பீட்டை திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காக அரசாங்க செலவினங்கள் எவ்வாறான மட்டத்தில் வைக்கப்பட வேண்டும் என தீர்மானிப்பதற்காகவும், பாதீட்டு இடைவெளியினை எவ்வளவு என தீமானிப்பதற்காகவும் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைரீதியான பகுப்பாய்வுகளுக்காகவும், வருமான எதிர்வுகூறல் மற்றும் அறிக்கைகளை வைத்துக் கொள்ளல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 109,612,000 தொகையான உற்பத்தி வரித் தொகையில் ரூபா 12,505,974 ‘தொகை 05 வருடங்களுக்கு பின்னர் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி குத்தகை வாகனத்திற்காக பெறப்பட்ட கடன் பணத்தை மீள செலுத்தும் செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. மிகுதி வரித் தொகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு ஏற்பட முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது 08 செலவின விடயங்களில் முரண்கள் 88 சதவீதத்திற்கு குறைவடைந்தது முதல் 64 சதவீதம் வரை அதிகரித்த இடைவெளியில் வேறுபாடு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2.2 வங்கி கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் காசோலைகளை விநியோகிக்கும் போது அவற்றின் திகதி மீண்டும் மீண்டும் நீடிக்கப்பட்டு நீண்ட காலம் வங்கி இணக்கக் கூற்றுக்களில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | இந்த சகல காசோலைகளும் அரசாங்க நிறுவனங்கள், அதிகார சபைகள் மற்றும் தொழிற்சங்களுக்காக விநியோகிக்கப்பட்ட காசோலைகளாகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வங்கி கணக்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் வினியோகிக்கப்பட்ட மூன்று காசோலைகள் 06 மாதங்களை விஞ்சியிருக்கும் போது நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் திகதி நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | COVID - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக காசோலைகளின் திகதி நீடித்தல் சரியானதாக நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன், இதன் பின்னர் எதிர்வரும் காலங்களில் பதிவேட்டை நாளது வரையாக பேணிச் செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். | -மேற்படி- |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் அழிவடையச் செய்ய வேண்டிய பொருட்களை அழிவடையச் செய்தல், பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான பொருட்களை பழுதுபார்த்தல் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்யக்கூடிய பொருட்களை ஏலத்தில் | COVID - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏதாவது தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், தற்போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களை அழிவடைச் செய்தல் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை செய்து முடிவுறுத்த வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதும், திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மெய்யாய்வில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக 2021 யூன் 24 கணக்காய்வு திகதி வரையிலும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 6 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று ACA-C படிவம்) மொத்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கூற்றில் அவ்வாறு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | ஆண்டின் போது முற்பணம் அறவிடல் ரூபா 14,383,960 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 5,320,469 தொகை காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 9,063,491 இனால் காசு உட்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | முற்பண செலுத்துகைகள் ரூபா 12,826,576 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பண கொடுப்பனவுகள் ரூபா 6,394,558 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 6,432,018 தொகையான காசு வெளிப்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் கட்டுநிதி கணக்கின் மீதி இருக்குமாயின் அந்த மீதி திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும், அந்த மீதி நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமமானவையின் கீழும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் கட்டுநிதி கணக்கின் மீதியான ரூபா 347,871 பெறுமதி அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கணக்குகள் தீர்க்கப்பட்டமையினால் அத்திகதியின் பின்னர் தீர்க்கப்படவேண்டிய நடைமுறைப் பொறுப்புக்கள் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படவில்லை. | -மேற்படி- |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 பெப்ரவரி 16 ஆம் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 102,497 தொகையான கடன் மீதி 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திணைக்களத்தின் புத்தகங்களில் காணப்படுகின்றது. இது தொடர்பாக கடந்த கணக்காய்வு ஐயவினாக்களில் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்ட போதிலும், இது வரையில் அந்த கடனை அறவிடுவதற்கோ அல்லது அதற்குரிய மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கோ தேவையான செயற்பாடுகள் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதியின் பின்னரும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது . அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக அல்லது விடுவிப்பதற்காக போதியளவான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 செப்டம்பர் 18 ஆம் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 101,561.30 தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தேவையான மிகுதி | அவர்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது . அதன் பிரகாரம் மிகுதி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை கோவைகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | |
| (இ) | 2015 செப்டம்பர் 23 ஆம் திகதி முதல் கடமை நடவடிக்கைகளுக்காக அறிக்கையிடாமையின் காரணமாக 2015 ஒக்டோபர் 13 ஆம் திகதி சேவையை கைவிட்டுச் சென்றதாக கட்டளையொன்று விநியோகிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் 2017 ஏப்ரல் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கப்படாததாக அறிவிக்கப்பட்டிருந்தமை 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தரிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டிய ரூபா 150,119 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பதில் கிடைக்காதிருக்குமாயின் வழக்கு தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | -மேற்படி- |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 144,150 தொகையான இடர் கடன் | கொவிட் தொற்று நோயின் காரணமாக வாரத்திற்கு சில தினங்கள் மாத்திரம் சேவைக்கு கோரப்பட்டிருந்தமையினால் ஓய்வூதிய | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| மீதி 2020 திசெம்பர் 31 ஆம் வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தமைக்கு 2021 பெப்ரவரி 10 வரையிலும் அவரின் ஓய்வூதியத்தை தயாரிப்பதற்குரிய கோவைகளை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தாமதமடைந்தமை காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கோவைகளை தயாரிப்பதற்கும் அனுப்புவதற்கும் சிறிது தாமதம் ஏற்பட்டிருந்தது. | |

## 2.5 வைப்புக் கணக்குகள்

----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 10,867,222 தொகையொன்று மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த வைப்புக்கள் கள உத்தியோகத்தர்கள் அந்த பதவிகளில் இருந்து விலகிச் செல்லும் போது திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட மீதியாக இருந்ததுடன், அந்த பணம் கிடைத்தவுடன் உரிய குத்தகைக் கம்பனிக்கு செலுத்தி பொறுப்புக்களை தீர்த்து வைப்பதன் மூலம் அதற்குரிய குத்தகை வட்டியை குறைத்துக் கொள்வதற்கோ அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள செலுத்துதவற்கு உள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பாக சரியான மதிப்பீடொன்றின் பின்னர் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையினால் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஆகக் கூடிய பொருளாதார நலனை பெறும் வகையில் நடவடிக்கைகளைச் செய்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

#### 3.1.1 குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்புக்கள் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் 240-2-2 செயற்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அசவர தேவை பொறுப்புக்கள் செலவின விடயத்தின் கீழ் உரிய நிறுவனத்திற்கு அவசர மற்றும் எதிர்பார்க்கப்படாத தேவையொன்று ஏற்படுமிடத்து நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளை செயற்திறன் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், செயற்திறனின் பிரகாரம் நிதிஏற்பாட்டை மீண்டும் மீண்டும் ஒதுக்குவததோ அல்லது மாற்றுவதோ பாதீட்டு திணைக்களத்தின் பணிப் பொறுப்பாக இருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அசவர தேவை பொறுப்பு செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக விநியோகிக்கப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

(i) குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்பு செலவின விடயத்தின் கீழ் மீண்டெழும் செலவினங்களுக்கான அதிகாரம் வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் ரூபா 11,997.86 மில்லியன் அதாவது 38 சதவீத சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின விடய இலக்கம் | அதிகாரம் வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு | ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|
| ------------ | ------------ | ----------- | ------------ |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2-2-0-1702-11 | 31,740.93 | 19,743.07 | 11,997.86 |

அவசர மற்றும் எதிர்பார்க்காத தேவைகள் ஏற்படுமிடத்து நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதுடன் , மேலும் அந்த நிதிஏற்பாட்டின் செலவினங்களை செய்தல் மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

சரியான மதிப்பீடு ஒன்று இன்றி வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதிஏற்பாடுகளை உள்ளடக்கியதன் காரணமாக பாதீட்டு நிலுவை உயர்வடைந்து சென்றமையினால் அவற்றை நிதியீட்டம் செய்வதற்காக மேலும் செலவினங்களைச் செய்வதை கட்டுப்படுத்துதல் வேண்டும்.

(ii) நிதிப் பிரமாணம் 75 இன் பிரகாரம் மேலதிக நிதிஏற்பாட்டின் அளவொன்றை மாற்றுவதற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியது சேமிப்புக்கள் கழிக்கப்பட்டதன் பின்னரான மீதியாக இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசரத்தேவை பொறுப்புக்கள் செலவின விடயத்தின் கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாக செலவினம் செய்யப்படாமல் ரூபா 14,302,830,684 தொகை சேமிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 75 இற்கு உரியதாக செய்யவேண்டிய முழுப்பொறுப்பும் உரிய நிறுவனத்துக்கு உரியதாகும்.

-மேற்படி-

(ஆ) குறைநிறைப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்புக்கள் செலவின விடயத்தின் கீழ் செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மூலதன செலவினங்களுக்காக அதிகாரம் வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு மற்றும் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட நிதிஏற்பாடுகள் என்பவற்றுக்கு இடையே ரூபா 3,199,137,385 தொகை அதாவது 26 சதவீத சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதில் நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் ஆண்டில் முழுமையாக விநியோகிக்கப்படாத பெறுமதி கூட்டுமொத்தமாக ரூபா 100,000,000 ஆக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின விடய இலக்கம் | அதிகாரம் வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு | ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 2503-14 | 50,000,000 | - | 50,000,000 |
| 2503-15 | 19,000,000 | - | 19,000,000 |
| 2503-16 | 1,000,000 | - | 1,000,000 |
| 2503-17 | 30,000,000 | - | 30,000,000 |
| 2503-11 | 12,404,627,000 | 9,305,488,615 | 3,099,138,385 |
| மொத்தம் | | | 3,199,137,385 |

அந்த நிதி ஏற்பாட்டின் செலவினங்களை செய்தல் மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

-மேற்படி-

(ii) மூலதன செலவினங்களுக்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதிஏற்பாடு முழுமையாக செலவிடப்படாமல் சேமிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அப்பெறுமதி ரூபா 2,415,269,093 ஆக காணப்பட்டது.

-மேற்படி-

-மேற்படி-

## 3.1.2 அரசாங்க முற்பணக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட வரைவு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2020 இன் ஒதுக்கீட்டு சட்டத்தின் 8 ஆவது | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கபட்டுள்ள செயலாற்றல் அறிக்கை வரைவு | ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள எல்லைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் கீழ் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவினங்களின் 63 அலகுகளில் எல்லை திருத்தப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 58 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் எல்லையினை மாற்றுவதற்குரிய பரிந்துரைக் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்படுத்தும் இராஜங்க அமைச்சு (40401) எல்லையை மாற்றுவதற்குரிய தகவல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | கட்டத்தில் காணப்படுவதுடன் அந்த வரைவு அறிக்கையில் 54 செலவின தலைப்புகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்ட கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சை உள்ளடக்கிய 04 செலவின அலகுகளுக்கான எல்லை திருத்தத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவு செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான 58 செலவின அலகுகளுக்கான எல்லை திருத்தத்திற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | இணங்குதல் மற்றும் அதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 நிறுவனங்களுக்கான எல்லை திருத்தப்பட்டிருந்தமை வரைவு செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த திருத்தத்திற்கு உரியதாக பெறப்பட்ட அங்கீகாரம் கண்காய்விற்கு | அதன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தலைப்புக்களுக்காக எல்லை திருத்தத்திற்கு | ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கு இணங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | கோரிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | மற்றும் அதற்குரிய மிகுதி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்குரிய 2020 இன் 06 ஆம் இலக்கம் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் பட்டோலையின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணம் ‘‘பீ’’ கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான உள்ளபடியான பெறுமதி மற்றும் உரிய எல்லையினை விஞ்சியமை அல்லது அடையாதிருந்தமை திறைசேரி இறுதி கணனி அச்சிடல் கூற்றுடன் பரீட்சிக்கப்பட்டது. அதன்போது எல்லையினை அடையாத 05 சந்தரப்பங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சிய 06 சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய திருத்தங்களுகாக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செலவின தலைப்பு 11601, 30201, 28801, 33401, 26901 இனால் எல்லை திருத்தத்திற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. தலைப்பு 11501, 41901, 42301, 21601, 41201, 41601, 42701, 02001 இற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட செலவின எல்லைகளுக்காக மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | அவ்வாறே 2020 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் மூன்றாம் பட்டோலையின் மூலம் வழங்கப்பட்டுள்ள களஞ்சிய மற்றும் வணிக முற்பண நடவடிக்கைகள் தொடர்பான உள்ளபடியான பெறுமதி மற்றும் திறைசேரி இறுதி கணனி அச்சிடலின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தின் (23202) மற்றும் விவசாய திணைக்களத்தின் (28502) ஆகக்கூடிய எல்லையினையும் விஞ்சி இருந்தது. எனினும் அதற்குரிய திருத்தங்களுக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தலைப்பு 23202 இற்காக திருத்தம் தேவையற்று இருந்ததாக தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. தலைப்பு இலக்கம் 25002, 25003, 22302, 30602, 31002, 31003 இற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு பெறப்பட்டுள்ள அங்கீகாரத்திற்குரிய முன்மொழிவு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

(உ) 04 நிறுவனங்களுக்கு உரிய அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ‘‘பீ’’ கணக்குகளின் இறுதி நிதிக்கூற்றுக்களில் காாண்பிக்கப்பட்டடுள்ள பெறுமதி மற்றும் இறுதி திறைசேரி அச்சிடல் குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

| தலைப்பு இல. | திணைக்களம் / அமைச்சு | எல்லை | திணைக்கள நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி | திறைசேரி அச்சிடல் குறிப்புக்களில் காணப்பிக்கப்பட்டுள்ள பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| ----- | ----- | ---- | -------- | -------- | ------ |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 41201 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு | ஆகக்குறைந்த செலவின எல்லை | 13,165,612.85 | 5,767,253 | 7,398,359.85 |
| 11501 | வலுசக்தி அமைச்சு, | ஆகக் கூடிய செலவின எல்லை | 2,484,748.66 | 12,886,577 | 10,401,828.34 |
| 33401 | பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி | வரவு மீதி எல்லை | 38,930,765.86 | 38,931,431.86 | 666 |
| 42701 | கால்நடை வள, பண்ணை மேம்பாடு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | 10,227,093.75 | 4,213,051 | 6,014,041.75 |

குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

-மேற்படி-

(ஊ) நில அளவையாளர் திணைக்களத்தின் (தலைப்பு இல. 288) ஆகக்கூடிய செலவின எல்லையை விஞ்சி ரூபா 154,717 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த எல்லையை விஞ்சியதற்கு தேவையான திருத்தங்கள் அவசியமற்றதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கண்காய்விற்கு அறிவிக்கப்பட்டடிருந்தது.

சரியானது.

-மேற்படி-

| | | | |
|---|---|---|---|
| (எ) | வலுசக்தி அமைச்சின் (தலைப்பு இல. 115) மற்றும் வலய ஒத்துழைப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு (தலைப்பு இல. 419) இனால் கோரிக்கை விடப்பட்ட ஆகக் குறைந்த எல்லை பெறுவனவு திருத்தத்திற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் ஆகக்கூடிய செலவின எல்லைத் திருத்தம் கோரப்படாதிருந்ததாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியானது. | -மேற்படி- |
| (ஏ) | பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்தின் (தலைப்பு இல - 334) மற்றும் மாவட்ட செயலகம் - மட்டக்களப்பு (தலைப்பு இல. - 269) வரவு மீதி எல்லையை விஞ்சியமை காண்பிக்கப்பட்டதுடன் அதற்குரிய எல்லைத் திருத்த கோரிக்கை தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கண்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியானது | -மேற்படி- |
| (ஐ) | 35 நிறுவனங்களில் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற அரசாங்கத்தின் முற்பண கணக்கு மீதிகள் தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டதுடன் அவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 1,361,561,464 தேறிய பெறுமதியாக இருந்தது. மேற்கூறப்பட்ட தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே 09 நிறுவனங்களில் ரூபா (20,479,126.88) தொகையான செலவு மீதியும் உள்ளடங்கி இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் மூலம் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உரிய செலவின தலைப்பினால் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | திணைக்களத்தால் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பாதிட்டு திணைக்களத்தின் 150 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 2,824,733,981 ஆன வாகனங்களின் குத்தகைக் காலம் மீளாய்வாண்டின் முடிவடைந்திருந்த போதும் அவற்றை உரிய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட, ஏனைய நிறுவனங்களுக்கு இதுவரை கையளிக்கப்படாத ரூபா 2,824,733,981 தொகையான குத்தகை வாகனங்கள் 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட COVID 19 தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சிற்சில நடவடிக்கைகளின் காரணமாக ஆண்டின் போது உரிய பிரகாரம் கையளிப்பதற்கு முடியாதிருந்தது. | குத்தகை காலம் முடிவடைந்த வாகனங்களை முறையான பிரகாரமும் விரைவாகவும் கையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 யூலை 23 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரித்து 05 வருட காலத்திற்கு பின்னர் ஆட்களின் பெயரில் கையளிக்கப்பட வேண்டிய போதிலும் பொதுத் திறைசேரியினால் ரூபா 16,792,961,055 பெறுமதியான | 2020 வரை கொடுப்பனவுகள் பூர்த்தியடைந்த மோட்டார் சைக்கிள்களை கையளிப்பதற்காக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் COVID 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்த நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள்கள் அந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவற்றை உரியவாறு கைளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | . | |

## 4. மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையில் 12 பதவிகளும், இரண்டாம் நிலையில் 09 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் ஆக 25 வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளை நிரப்புவதற்காக அவ்வப்போது கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அதற்காக உத்தியோகத்தர்கள் கிடைத்திருக்கவில்லை. | இதனிடையே பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கமளிக்குமாயின் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். |